6

# மனைவிக்குத் தன் கணவருடன் உள்ள உறவு

*“மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ... அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூர வேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான்” (எபேசியர் 5:22-28).*

*இயேசுவின் மற்றும் புதிய ஏற்பாட்டின் போதனைகள் உண்மையில் போதிப்பது என்ன என்று கற்றுக்கொள்ளும் வரையில் பல மக்கள் அதை ஏற்றுக்கொள்ள மனதாய் இருப்பதாகக் காணப்படுகிறது. இயேசுவின் சீஷர்களில் சிலர், யோவான் 6:65, 66ல் அவரது கூற்றுக்களில் ஒன்றிற்கு சாதகமற்றவகையில் பதில்செயல் செய்தனர்:*

> *“ஒருவன் என் பிதாவின் அருளைப் பெறுவிட்டால் என்னிடத்திற்கு வரமாட்டான் என்று இதினிமித்தமே உங்களுக்குச் சொன்னேன்” என்றார். அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின்வாங்கிப்போனார்கள்.*

*இயேசு போதித்த ஒவ்வொன்றிலும் நாம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவரது போதனை நாம் கேட்க விரும்புவதாக இருக்கும்போது மாத்திரம் நாம் அவருடைய சீஷர்களாய் இருப்போம் என்றால், நாம் அவரது உண்மையான சீஷர்கள் அல்ல. மாறாக, நாம் நமது சொந்த வழிகளைப் பின்பற்றுகின்றவர்களாய் இருக்கின்றோம்.*

*பலர் சுவிசேஷங்களை ஏற்றுக்கொள்ளுகையில், புதிய ஏற்பாட்டின் மற்ற புத்தகங்களில் இயேசுவின் போதனைகள் அடங்கியிருப்பதில்லை என்று உரிமைகோருகின்றனர். அவர்கள் இயேசுவின் வார்த்தைகள் யாவற்றையும் ஏற்றுக்கொள்ளத் தவறுகின்றனர். அவர் பரிசுத்த ஆவியின்மூலமாக புதிய ஏற்பாடு முழுவதையும் எழுதும்படி ஏவினார் (யோவான் 14:26; 16:12-14; 1 கொரிந்தியர் 14:37). இயேசு வெளிப்படுத்திய சகலசத்தியங்களையும் கற்றுக்கொள்வதற்கு நமக்கு நான்கு சுவிசேஷங்களைக் காட்டிலும் அதிக மான புத்தகங்கள் தேவைப்படுகின்றன.*

ஆதியாகமம் 2ல் உள்ள ஒரு கூற்றைப் பவுல் மறைமுகமாய்ச் சுட்டிக்காண்பித்ததில், அவர் இயேசுவின் போதனைத்தொடரைப் பின்பற்றினார் மற்றும் அவர் எபேசியர் 5:29-31ஐ எழுதுகையில் இயேசுவின் போதனையுடன் இணக்கமாகியிருந்தார். இயேசு, திருமணம் பற்றிய தமது போதனையில் ஆதியாகமத்தில் உள்ளவற்றிற்கு வேண்டுகோள் விடுத்தார். அவர், "ஆதியிலே மனுஷரை உண்டாக்கினவர் அவர்களை ஆணும் பெண்ணுமாக உண்டாக்கினார் என்பதையும், இதினிமித்தம் புருஷனானவன் தன் தகப்பனையும் தாயையும் விட்டுத் தன் மனைவியோடே இசைந்திருப்பான்; அவர்கள் இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள் என்று சொன்னதையும் நீங்கள் வாசிக்கவில்லையா?" என்று கேட்டார் (மத்தேயு 19:4, 5; ஆதியாகமம் 2:24ஐக் காணவும்). இவ்வாறு இயேசு, ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவுப்பற்றி ஆதியாகமத்தில் உள்ள கூற்றுக்களுக்குத் தமது அங்கீகாரத்தைக் காண்பித்தார். அதுபோலவே, ஆணுக்கும் பெண்ணுக்குமான உறவுப்பற்றிய கூற்றுக்களுக்குப் பவுல் தமது அங்கீகாரத்தைச் சமர்ப்பித்தார்.

## கணவரின் பங்கு

திருமண உறவுமுறையில் பொறுப்பு என்பது கணவரிடத்தில் இருந்து தொடங்குகிறது. திருமணத்தை சரியான வழியில் நடத்தும் பாரம் அவரது தோள்களில் அமைந்துள்ளது, இது தேவனுடனான நமது உறவுமுறையானது தேவனிடத்தில் இருந்து தொடங்கி அந்த பாரம் அவர்மீது அமைந்துள்ளதைப் போன்றதாகவே இருக்கிறது. தியாகம் யாவும் நிறைந்த அன்புடன் தேவன் நம்மிடம் வந்து சேர்ந்ததைப்போன்றே, கணவரும் தமது மனைவியிடத்தில் தியாகமான அன்புடன் வந்துசேர வேண்டும் (எபேசியர் 5:25, 28; கொலோசெயர் 3:19). இதுவே திருமணம் கட்டியெழுப்பப்படக்கூடிய அஸ்திபாரமாக உள்ளது.

பேதுரு, ''அந்தப்படி புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரிக்கிறவர்களானபடியினால், அவர்களுக்கு செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்" என்று எழுதினார் (1 பேதுரு 3:7). எந்தக் கணவருக்கும் தமது மனைவியின்மீது ஆதிக்கம் செய்யவோ, அவள்மீது ஆளுகை செய்யவோ அல்லது அவளது முதலாளியாகச் செயல்படவோ உரிமையில்லை. அவர் தமது மனைவியை அக்கறையுடனும், சுயத்தைத் தியாகம் செய்தும் மற்றும் புரிந்துகொள்ளும் வழிமுறையிலும் நடத்த வேண்டும். கணவர் தமது மனைவியைச் சரீரரீதியாகச் சமமாகக் கையாளும் உரிமையைத் தேவன் கொடுத்திருக்கவில்லை. அவள் தன்னை, மிருகத்தனமான ஆண்சக்திக்கு எதிராகத் தற்காத்துக்கொள்ளும்படி எதிர்பார்க்க முடியாது. அவள் அவரது ஆவிக்குரிய மற்றும் சரீரத்திற்குரிய துணையாளியாக மதிக்கப்பட்டு கனப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு கிறிஸ்தவமானது கணவர்/மனைவி உறவில் பெண்ணை உயர்த்தியுள்ளது.

## மனைவியின் பங்கு

மனைவியானவள் தனது கணவரின் நடத்துவத்திற்கு மன விருப்பத்துடன் கீழ்ப்படிய வேண்டும். அவர் அவளைக் கீழ்ப்படிய செய்வதற்குத் தனது மிருகபலத்தைப் பயன்படுத்தக்கூடாது. அவர் குடும்பத்தின் விஷயங்களை அவளது நன்மைக்காக வழிநடத்த நாடுகையில் அவள் மனவிருப்பத்துடன் அவருக்கு ஒத்துழைக்க வேண்டும். அவர் மிருகத்தனத்துடன் இருப்பதோ அல்லது அவள் கலகம் செய்வதோ இயேசுவின் சித்தத்திற்கு நேர்மாறானதாக இருக்கும்.

### கீழ்ப்படிதல்

ஒவ்வொரு நபரும் வாழ்வில் அவரது அல்லது அவளது நிலைப்பாடு எப்படியிருப்பினும், யாரேனும் ஒருவருக்குக் "கீழ்ப்படிவதற்கு" (Gk.: *hupotasso*) பொறுப்புக்கொண்டுள்ளார். "கீழ்ப்படிதல்" பற்றிய பின்வரும் வேதாகமக் கூற்றுக்களைப் பற்றி நாம் ஆழ்ந்து சிந்திப்போம்:

> *(1) இயேசு தமது பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக்கா 2:51). (2) அசுத்த ஆவிகள் எழுபது பேருக்குக் கீழ்ப்படிந்தன (லூக்கா 10:17, 20). (3) தேவன் படைப்பு யாவும் தமக்குக் கீழ்ப்படியும்படிப் படைத்தார் (ரோமர் 8:20). (4) குடிமக்கள் அரசாங்கத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும் (ரோமர் 13:1, 5; 1 பேதுரு 2:13; தீத்து 3:1). (5) ஒவ்வொன்றும் இயேசுவுக்குக் கீழ்ப்படியும்படி தேவன் படைத்தார் (1 கொரிந்தியர் 15:27; எபேசியர் 1:22; எபிரெயர் 2:8). (6) சபையானது இயேசுவுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபேசியர் 5:24). (7) நாம் தேவனுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (எபிரெயர் 12:9; யாக்கோபு 4:7). (8) வேலைக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (தீத்து 2:9; 1 பேதுரு 2:18). (9) தேவ தூதர்களும் அதிகாரங்களும் இயேசுவுக்குக் கீழ்ப்பட்டிருக்கிறது (1 பேதுரு 3:22). (10) இளம் கிறிஸ்தவர்கள் முதிய கிறிஸ்தவர்களுக்குக் கீழ்ப்படிய வேண்டும் (1 பேதுரு 5:5).*

மேற்கூறப்பட்ட உதாரணங்கள் ஒவ்வொன்றிலும், கீழ்ப்படிதலைச் சுட்டிக்காண்பிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள *hupotasso* என்ற கிரேக்க வார்த்தை, கணவரிடத்தில் மனைவி கொண்டுள்ள பொறுப்பை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்டுள்ளது (எபேசியர் 5:22, 24; கொலோசெயர் 3:18; தீத்து 2:5; 1 பேதுரு 3:1, 5). *Hupo* ("கீழ்") மற்றும் *tasso* ("ஏற்பாடுசெய்தல்") என்ற இரு வார்த்தைகளால் தொகுக்கப்பட்ட இது "உள்ளாக அடங்கியிருத்தல், கீழ்ப்படியும் தன்மை, கீழ்ப்படிந்திருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. கணவர் தமது மனைவிக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று குறிப்பாகக் கட்டளையிடப்படவில்லை, ஆனால் மனைவி தன் கணவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று குறிப்பாகக் கட்டளையிடப்பட்டுள்ளது. நாம் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிய வேண்டியவர்களாய் இருக்கையில் (எபேசியர் 5:21; 1 கொரிந்தியர் 16:16), ஒருவர் மற்றவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்ற தேவனுடைய கட்டளையானது, நம்மீது உரிமைமிகுந்த

*அதிகாரத்துவம் உடையவர்களுக்கு நாம் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்ற கடமையில் இருந்து நம்மை விடுவிப்பதில்லை. ஒரு கிறிஸ்தவர் அடிமை யாயிருந்தால், அவர் தமது எஜமானருக்குக் கீழ்ப்படிய வேண்டும். குடி மக்கள் அரசாங்கத்திற்கும், இளைஞர்கள் முதியவர்களுக்கும் கீழ்ப்படிய வேண்டும், ஆனால் இது கீழ்ப்படிதல் என்ற அதே கருத்துணர்வில் நேர் மாறாக இருப்பதில்லை. இது கணவர்/மனைவி உறவுமுறையிலும் உண்மை யானதாகவே உள்ளது:*

> *மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப்புருஷருக்குங் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக் கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் (எபேசியர் 5:22-24).*

> *மனைவிகளே, கர்த்தருக்கேற்கும்படி, உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் (கொலோசெயர் 3:18).*

> *முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே ... தேவவசனம் தூஷிக்கப் படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் ... தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிற வர்களுமாயிருக்கும்படி ... போதிக்கிறவர்களுமாயிருக்கும்படி ... (தீத்து 2:3-5).*

> *அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப்புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள் ... (1 பேதுரு 3:1).*

*கிறிஸ்தவராக இருத்தல் என்பது ஒரு அடிமைக்குத் தனது எஜமானுக்கு விரோதமாகக் கலகம் செய்ய உரிமையளிப்பதில்லை, ஒரு குடிமகனுக்கு அரசாங்கத்தை எதிர்த்துக் கலகம் செய்ய உரிமையளிப்பதில்லை, அல்லது ஒரு கிறிஸ்தவ மனைவி தனது கணவருக்கு எதிராகக் கலகம் செய்ய உரிமை யளிப்பதில்லை. இந்த அதிகாரத்துவ ஏற்பாடுகளில் இருப்பவர்கள் தேவனு டைய சித்தத்திற்கு எதிரான முடிவுகளை மேற்கொள்ளும்போது மாத்திரமே, அவர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டியவர்கள் மனித அதிகாரத்துவத்திற்குக் கீழ்ப்படியாதிருக்க நல்ல காரணத்தைக் கொண்டுள்ளனர் (நடபடிகள் 5:29).*

*கணவரை மனைவியின் தலையாக தேவன் ஏற்படுத்தியுள்ளபடியால், அவள் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் (1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 5:23). Kephale என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ள "தலை" என்ற வார்த்தை பல அர்த்தங்களைக் கொண்டுள்ளது. (1) தலையானது உடலின் மற்ற பாகங்களைக் கட்டுப்படுத்தும் அதன் உறுப்பாக உள்ளது (மத்தேயு 5:36; 6:17; 8:20; 10:30). (2) மூலைக்கல்லானது, ஒரு கட்டிடத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்ததாய் செயல்புரிகிறது போல,*

தலை என்பது உடலின் எஞ்சியபகுதியானது சார்ந்து அமைக்கப்பட்டுள்ள மிக முக்கியத்துவம் வாய்ந்த நிலையைக் கொண்டுள்ளது (மத்தேயு 21:42; மாற்கு 12:10; லூக்கா 20:17; நடபடிகள் 4:11; 1 பேதுரு 2:7). (3) தலையின் அதிகாரத்துவத்தின்கீழ் உள்ளவைகள் தலைக்கு (பதில்தரும்) பொறுப்புக் கொண்டுள்ளன. தேவன் கிறிஸ்துவுக்குத் தலையாய் இருக்கின்றார், கிறிஸ்து ஆணுக்குத் தலையாய் இருக்கின்றார். கிறிஸ்து சபைக்குத் தலையாகவும் (எபேசியர் 1:22; 4:15; 5:23; கொலோசெயர் 1:18) சகல அதிகாரங்களுக்குத் தலையாகவும் (கொலோசெயர் 2:10) இருக்கின்றார். (4) பெண்ணுக்குத் தலை என்ற வகையில் ஆண், கணவர்/மனைவி உறவுமுறையில் பெண்ணை நடத்துவதற்குப் பொறுப்பாளியாய் இருக்கின்றார் (1 கொரிந்தியர் 11:3; எபேசியர் 5:23).

"தலையாக" இருப்பவர் அதிகாரத்துவத்திற்குப் பொறுப்பாளியாக இருக்கின்றார். மனப்பூர்வமான கீழ்ப்படிதல் என்பதே இந்த அதிகாரத்திற்குச் சரியான பதில்செயலாக உள்ளது. இயேசு, தமது தலையாகிய பிதாவுக்கும் (பிலிப்பியர் 2:5-11), தமது பெற்றோருக்கும் (லூக்கா 2:51) தமது தாழ்மையான கீழ்ப்படிதலின்மூலம் தமது பெருமையை தாமே குலைத்துக்கொள்ளவில்லை, ஆனால் அதற்குமாறாக அவர் அதன்மூலம் தம்மை உயர்த்திக் கொண்டார். மனப்பூர்வமான கீழ்ப்படிதல் என்பது பெருமையை குலைப்பதில்லை, ஆனால் அதற்குமாறாக அது தங்கள்மீது அதிகாரம் உடையவர்களுக்கு மனப்பூர்வமாகவும் இருதயத்தில் இருந்து வரும் பதில்செயல்மூலமும் கீழ்ப்படிபவர்களுக்குப் பாராட்டையே அளிக்கிறது. மனைவியானவள் தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருத்தல் மூலமாகத் தன்னைத் தாழ்த்திக்கொள்ளுவதில்லை. அதற்கு பதிலாக, அவள் தனது கீழ்ப்படிதலினால், வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் இருந்த, தேவபக்தியுள்ள சாராள் மற்றும் பிறபெண்களைப்போன்று மாண்புமிக்க பண்பைக் காட்சிப்படுத்துகின்றாள்: "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" (1 பேதுரு 3:5).

நவீனகாலக் கிறிஸ்தவப் பெண், தனது கணவர் கிறிஸ்தவராயிருந்தால் அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகையில், அவர் ஒரு கிறிஸ்தவராயிராவிட்டாலும் அவள் அவருக்கு அப்போதும் கீழ்ப்படிய வேண்டும் (1 பேதுரு 3:1, 2). அவள் தனது மதிப்புமிக்க நடக்கையினால் அவரை கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்திக்கொள்ளுதல் என்பது மாத்திரமல்ல, ஆனால் அவ்வாறு கீழ்ப்படிந்திருத்தல் என்பது தேவனால் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்பதும் இதற்கு ஒரு காரணமாகும் (1 பேதுரு 3:5, 6).

### மரியாதை

பவுல், "... மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்" என்று எழுதினார் (எபேசியர் 5:33ஆ) "பயபக்தி" என்பது "பயம்" என்று அர்த்தப்படுகிற *phobatai* என்ற வார்த்தையில் இருந்தும் (மத்தேயு 2:22; 14:5, 30; 17:6), "மதிப்புமிக்க பயம்" (நடபடிகள் 10:2, 35; 13:16, 26;

*1 பேதுரு 2:17) என்ற வார்த்தையில் இருந்தும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. மனைவியானவள் தனது கணவருக்கு உறவுமுறையில் ஒரு தலைவர் என்ற வகையில் மரியாதையைக் காண்பிக்க வேண்டும். அவள் இதைச் செய்யத் தவறினால், சபையானது இயேசுவுக்கு, தன்னுடன் உள்ள உறவுமுறையின் அவரது நடத்துவப் பணிப்பொறுப்பை மதியாதிருப்பது எவ்வளவு தவறோ, அவ்வளவு தவறை அவள் [மனைவி] செய்பவளாயிருக்கின்றாள் (எபேசியர் 5:24).*

*மனைவி தனது கணவருக்குத் தரவேண்டிய மரியாதையின் வகைக்கு, சாராள் ஒரு உதாரணமாகக் கொடுக்கப்பட்டு இருக்கின்றாள். அவள் ஆபிரகாமுக்குக் கீழ்ப்படிந்தது மாத்திரமின்றி, அவரை "ஆண்டவனே" என்று அழைத்துமிருந்தாள் (1 பேதுரு 3:6; ஆதியாகமம் 18:12). "ஆண்டவனே" என்ற வார்த்தையைகொண்டு, "ஐயா" என்பது மாத்திரமே அர்த்தப்படுத்தப்பட்டதென்றால், இது மரியாதை நிறைந்த கீழ்ப்படிதலில் பதில்செயல் செய்ய இருதயம் ஆயத்தமாயிருந்ததைச் சுட்டிக்காண்பிக்காது. அவள் ஆபிரகாமை, ஆண்டவர் என்பதற்கான தெய்வீகக் கருத்துணர்வில் அல்ல, ஆனால் அதிகாரத்துவம் கொண்ட ஒருவர் என்ற மனிதக் கருத்துணர்விலேயே "ஆண்டவன்" என்று கனப்படுத்தினாள் என்பது இங்கு மறைகருத்தாக உள்ளது.*

*சிலர், சாராள் தனது கலாச்சாரத்தின்படி செயல்பட்டாள் என்று முடிவுசெய்கின்றனர், இவர்கள் பெண்களின் உடை பற்றிய பேதுருவின் அறிவுறுத்தலும்கூட கலாச்சாரத்தின்படியானது என்று கருதுகின்றனர் (1 பேதுரு 3:3-5). அப்படிப்பட்ட ஒரு முடிவானது அந்தக்கூற்று பற்றிய ஒரு தவறான புரிந்துகொள்ளுதலை வெளிப்படுத்துகிறது. பேதுரு, "அல்ல ... ஆனால்" என்று இவ்வாக்கியத்தில் மொழிபெயர்க்கப்பட்ட ou ... alla என்ற கிரேக்க மரபுச்சொற்றொடரைப் பயன்படுத்தினார். கிரேக்க மொழியில் இந்த வார்த்தைக் கட்டமைப்பு, முதலாவது சிந்தனையை விலக்காது இரண்டாவது சிந்தனையை வலியுறுத்தும் வகைமுறையாக உள்ளது. (மத்தேயு 10:34; யோவான் 12:47; 1 கொரிந்தியர் 1:17 ஆகியவற்றில் இதற்கு உதாரணங்களைக் காண முடியும்.) ராபர்ட் W. ஃபன்ட் என்பவர், "Ou ... alla என்ற சொற்றொடரானது* 'not so much ... as' *('அதைப்போன்றிராமல்') என்றும் அர்த்தப்படுகிறது, இதில் முதல் கூற்றானது முற்றிலுமாக விலக்கப்படாமல், செறிவூட்டப்படுகிறது" என்று உரைத்தார்.*[1]

*பெண்கள் தங்கள் சிகையை அலங்கரிக்கக்கூடாது, பொன் ஆபரணங்கள் அல்லது [விலையேறப்பெற்ற] உடைகள் உடுத்திக் கொள்ளக்கூடாது என்று பேதுரு எழுதவில்லை; அவ்வாறு அவர் அர்த்தப் படுத்தியிருப்பார் என்றால், பெண்கள் உடை உடுத்தக்கூடாது என்று கூறுபவராய் இருப்பார், ஏனெனில் அவர் உடைகளை இந்தப் பட்டியலில் உள்ளடக்கினார். இந்தக் கிரேக்க மரபுத்தொடரைக் கொண்டு அவர், கிறிஸ்தவப்பெண் தனது புறம்பான அலங்கரிப்பைக்காட்டிலும் தனது இருதயமான உள்ளான மனுஷியை அலங்கரித்தலில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று கூறினார். 1 தீமோத்தேயு 2:9, 10 வசனங்களில் பவுல்*

*me ... alla* ("அல்ல ... ஆனால்") என்ற கிரேக்க மரபுச்சொற்றொடரைப் பயன்படுத்துதன் மூலம் பேதுருவின் கூற்றை ஆதாரமாக நிலைப்படுத்தினர், இந்த வார்த்தைக் கட்டமைப்பானது *ou ... alla* என்ற சொற்றொடர் போன்றதாகவே அர்த்தம் கொண்டுள்ளது, இது "not so much this, as this," "not so much A, as B" என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது (யோவான் 6:27ஐ ஒப்பிடவும்). பெண்ணானவள் தனது உள்ளான பண்புகளைக் காட்டிலும் புறம்பான அலங்கரிப்பைக் குறித்து அதிக அக்கறைப்படக் கூடாது.

## முடிவுரை

முடிவு வழக்கிட இயலாததாக உள்ளது. கணவர்/மனைவி உறவில், தேவன் கணவருக்கே நடத்துவப் பொறுப்பைக் கொடுத்துள்ளார். இலக்கை அளித்து நடத்துவத்தை மேற்கொள்வதில், அவர் தனது மனைவியின் மரியாதையை ஆதாயப்படுத்தும் வகையிலான அன்பையும், பராமரிப்பையும் காண்பிக்க வேண்டும். கணவர் தேவனுடைய சித்தத்திற்கு நேர்மாறானதை அவளிடம் வலியுறுத்திக்கேட்காத வரையிலும், இந்த ஏற்பாட்டிற்கு மனைவி மதிப்பளித்து கீழ்ப்படிய வேண்டும்.

கணவர் தமது மனைவிக்கான எல்லாப் பொறுப்பையும் கொண்டிருக்கக்கூடியது போன்றே மனைவியும் தனது கணவருக்கான எல்லாப் பொறுப்பையும் கொண்டிருக்கக்கூடியவளாவதற்கு அதிக மான ஜெபமும் சிந்தனையும் அவசியமாய் இருக்கின்றன. கிறிஸ்தவ மனைவிக்குத் தேவனுடைய வசனம் அவளது பலமும் ஆற்றுப்படுத்துதலு மாயிருக்கையில், அவள் தனது கணவர் ஒவ்வொரு நாளையும் எதிர்கொள்வதற்குத் தைரியம் அளிக்கின்றாள். அவரது இடர்ப்பட்ட இருதயத்திற்கு ஆலோசனை தருகின்றாள், அவரது சரீரத் தேவைகளைத் திருப்திப்படுத்துகின்றாள், குடும்பத்தில் ஆவிக்குரிய தொனியாக இருக்கின்றாள், மற்றும் அவர் தூர இருக்கையில் அவளுடன் இருக்க ஏங்கும்படிக்கு சமாதானத்தின் இளைப்பாறுதல் நிறைந்த சூழ்நிலையையும் இசைவையும் கொண்டிருக்கின்றாள். அவள், அவரது வாழ்வை அதிகமாய் வாழத் தகுதியாக்குவதற்கான பண்புகளை அளித்து அவரது வாழ்வை நிறைவாக்குகின்றாள்.

---

குறிப்பு

[1]Robert W. Fund, *A Greek Grammar of the New Testament* (Chicago: University Press, 1961), 233.